<u>சுருக்கம்</u>

கல்லூரிக் கல்வி – சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சுக்காங்கல்பட்டி அஞ்சல், சீப்பாலக்கோட்டை கிராமம் என்னுமிடத்தில், தேனி மாவட்டம், ப்பி.எஸ். முத்து சேவை அறக்கட்டளை சார்பில் ப்பி.எஸ். முத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் இருபாலர் கல்லூரியை 2011–2012–ஆம் கல்வியாண்டில் துவங்க அனுமதியளித்து – ஆணையிடப்படுகிறது.

---

<u>உயர் கல்வித் (இ1) துறை</u>

அரசாணை (நிலை) எண். 85

நாள்: 25.02.2011
மாசி 13,
திருவள்ளுவர் ஆண்டு 2042,

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.858, கல்வித் துறை, நாள்:15.7.1989.
2. அரசாணை (நிலை) எண்.244, உயர் கல்வித் துறை, நாள்: 7.5.1997.
3. அரசாணை (நிலை) எண்.401, உயர் கல்வித் துறை, நாள்:23.7.1997.
4. அரசாணை (நிலை) எண்.165, உயர் கல்வித் துறை, நாள்: 23.4.1998.
5. அரசாணை (நிலை) எண்.356, உயர் கல்வித் துறை, நாள்: 29.9.2009.
6. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.44430/ஆர் 2/ 2009, நாள். 14.6.2010.

-----

<u>ஆணை</u> :–

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சுக்காங்கல்பட்டி அஞ்சல், சீப்பாலக்கோட்டை கிராமம் என்னுமிடத்தில், 2010–2011–ஆம் கல்வியாண்டில், ப்பி.எஸ். முத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் இருபாலர் கல்லூரியினை தொடங்க தேனி மாவட்டம், ப்பி.எஸ். முத்து சேவை அறக்கட்டளை சார்பில் விண்ணப்பம் பெறப்பட்டு, மதுரை, மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் ஆய்வறிக்கை பெறப்பட்டது எனவும், இக்கல்வி முகமை கீழ்க்கண்டவற்றை நிறைவு செய்துள்ளதாக மேலே ஆறில் படிக்கப்பட்ட தனது கருத்துருவில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார்:–

i) இக்கல்வி முகமையால் கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் சார்ந்த கல்வி முகமையின் பெயரில் கூட்டுக் கணக்கில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தில் ரூ.20 இலட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு வைப்புத் தொகையாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

ii) இக்கல்வி முகமையால் 10.34 ஏக்கர் நிலம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சுக்காங்கல்பட்டி அஞ்சல், சீப்பாலக்கோட்டை கிராமம் என்னுமிடத்தில் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளது.

iii) சுயநிதி கல்லூரிகள் தொடங்கி நடத்துவது தொடர்பான அரசாணைகளில் விதிக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதாக சார்ந்த கல்வி முகமை ரூ.10–க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்த பத்திரம் அளித்துள்ளது.

**2.** மேலே ஆறில் படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநரால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட, தேனி மாவட்டம், ப்பி.எஸ். முத்து சேவை அறக்கட்டளை சார்பில், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சுக்காங்கல்பட்டி அஞ்சல், சீப்பாலக்கோட்டை கிராமம் என்னுமிடத்தில் ப்பி.எஸ். முத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்ற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் இருபாலர் கல்லூரியினை தொடங்க அனுமதி வேண்டுகிற கருத்துரு மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையின்படி மிக கவனமுடன் அரசால் ஆராயப்பட்டது.

**3.** அதனடிப்படையில், தேனி மாவட்டம், ப்பி.எஸ். முத்து சேவை அறக்கட்டளை சார்பாக, **2011–2012–**ஆம் கல்வியாண்டில், ப்பி.எஸ். முத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்ற பெயரில், புதிய நிதியுதவி பெறாத தனியார் இருபாலர் கல்லூரியினை, தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சுக்காங்கல்பட்டி அஞ்சல், சீப்பாலக்கோட்டை கிராமம் என்னுமிடத்தில் சர்வே எண். 15/1B, 18/4, 18/5, மற்றும் 18/5B ஆகியவற்றில் உள்ள **10.34** ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள நிரந்தரக் கட்டிடத்தில் (RCC கட்டிடம்), ஓராண்டுக்கு (முதலாமாண்டுக்கு) கீழ்க்கண்ட பாடப்பிரிவுகளுடன் துவங்க அனுமதியளிக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே அனுமதியளித்து ஆணையிடுகிறது :–

i) B.A., (English Literature)
ii) B.Sc., (Computer Science)
iii) B.Com.,
iv) B.B.A.,
v) B.Com., (Computer Application)

**4.** மேற்கண்ட அனுமதி கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டது எனவும் அரசு ஆணையிடுகிறது:–

(அ) கல்லூரியின் நிரந்தர இடத்தில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதற்கான உரிய சான்றிதழுடன் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(ஆ) அனைத்துப் பாடப்பிரிவுகளும் தொடங்குவதற்கு முன்பே சார்ந்த பல்கலைக்கழகத்தின் இணைவு பெறுதல் வேண்டும்.

(இ) மேலே பத்தி 3–இல் தெரிவிக்கப்பட்டுள்ள இடம் கல்லூரி பயன்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்தப் படவேண்டும்.

(ஈ) அரசு எவ்விதமான நிதியுதவியையும் எத்தருணத்திலும் இக்கல்லூரிக்கு வழங்காது.

(உ) சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குவது தொடர்பான அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கல்வி முகமை முழுமையாக நிறைவு செய்யவேண்டும்.

(ஊ) அரசு / பல்கலைக்கழகம் அனுமதித்துள்ள பாடப்பிரிவுகளை தவிர வேறு எந்த பாடப்பிரிவுகளையும் கல்வி முகமை கல்லூரியில் தொடங்கக் கூடாது.

(எ) பல்கலைக்கழக நல்கைக்குழு / பல்கலைக்கழகம் / அரசு நிர்ணயித்துள்ள அளவுகோல் மற்றும் கல்வித்தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே கல்லூரியின் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர் அமர்த்தப்படவேண்டும்.

(ஏ) கல்விமுகமை, அரசு அவ்வப்போது நிர்ணயம் செய்யும் ஏற்புடைய கட்டணங்களைத் தவிர முதலீட்டாளர் கட்டணம் அல்லது நன்கொடை ஆகியவற்றை எந்தவிதத்திலும் பெறக்கூடாது.

(ஐ) அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநரால் நிர்ணயம் செய்யப்பட்ட படிப்புக்கட்டணம், சிறப்புக்கட்டணம், விண்ணப்பக்கட்டணம், பதிவுக்கட்டணம், ஆய்வுக் கட்டணம், காப்புறுதிக்கட்டணம் ஆகியவற்றை மட்டுமே கல்லூரி மாணாக்கரிடம் வசூலிக்கவேண்டும்.

(ஒ) கல்விமுகமை, அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநர் அவ்வப்போது அறிவிக்கும் மாணாக்கர் சேர்க்கைக்கான நெறிமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்றவேண்டும். மேலும் அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து, **50** விழுக்காடு இடங்கள் மற்றும் சார்ந்த பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்படும் அனைத்து கூடுதல் இடங்களையும் நிரப்ப வேண்டும்.

(ஓ) கல்விமுகமை, இக்கல்லூரியை நிர்வகிக்க முடியாமல் போகும் நிலையில் அதனை அரசு ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முன்வராது.

(ஔ) இக்கல்லூரிக்கான கட்டடங்களின் நிலைத் தன்மைக் குறித்த சான்றிதழ், தீயணைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதற்கான சான்றிதழ் மற்றும் மின் இணைப்பு தரச்சான்றிதழ் ஆகியவை பெறப்பட வேண்டும். மேலும், மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட வேண்டும்.

(ஃ) அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு பின்னர் உரிய அறிக்கை பெற்று ஆய்வு மேற்கொண்டு உரிய நிரந்தரக் கட்டிடத்தில் அனைத்து வசதிகளுடன் சிறந்த முறையில் செயற்பட்டு வந்தால் மட்டுமே தொடர்ந்து இக்கல்லூரி செயல்பட அனுமதிக்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், மதுரை.
பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
செயலர் / தலைவர், ப்பி.எஸ். முத்து சேவை அறக்கட்டளை, 40 B/2W, பட்டாளம்மன் கோவில் தெரு, கூடலூர் அஞ்சல், உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம் – 625 518.
நகல்: உயர் கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரிகள்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்